


டிசம்பர் 9, 2014

**உரிமையுள்ள ஒருவர் அனைத்து பொக்கிஷங்களும் உள்ள ஒருவரிடம் (பாபா) சம்பாஷனை செய்கின்றார்**

**முதல் விழிப்புணர்வு :** நான் கண்களை திறக்கும் அந்த ஷணத்தில், நான் உணர்ந்து பார்க்கின்றேன்: "நான் ஓர் ஆத்மா. நான் ஒளியாலான இனிமையான வீட்டிலிருந்து, உலகிற்கு பிரகாசிக்கும் ஒளியை கொடுப்பதற்காக கீழிறங்கி வந்திருக்கின்றேன்."

**நான் யார்?:** நான் பாபாவின் பொக்கிஷ கிடங்கிற்கு அனைத்து உரிமைகளும் கொண்டிருப்பவன் ஆவேன். நான், ஒரு பிராமண ஆத்மா. பாப்தாதாவை சந்தித்து என்னுடைய உரிமைகளை பெற்று கொள்ள வந்திருக்கின்றேன்.

**நான் யாருக்கு சொந்தமானவன்? :** ஆத்மா பாபாவுடன் உரையாடுகின்றார்: இனிமையான பாபா, காலை வணக்கம் / குட் மார்னிங். திறந்த பொக்கிஷ கிடங்கை உடைய ஒருவரான உங்களுக்கு நான் சொந்தம். நீங்கள் எனக்கு எல்லையற்ற பொக்கிஷங்களை கொடுக்கின்றீர்கள்.

பாபா ஆத்மாவுடன் பேசுகின்றார்: இனிமையான குழந்தாய், விழித்துக்கொள்! என் அருகில் அமர்ந்து கொள். பாபாவின் அனைத்து பொக்கிஷங்களும் உன்னுடையது. பாபா உனக்கு அனைத்து உரிமைகளும் உள்ள சிம்மாசனத்தை கொடுக்கின்றார். குறுகிய காலத்திற்கு சிம்மாசனத்தை கொண்டிருக்கும் அரசன் கூட, சிறந்தவற்றை அடைகின்றான் – ஆனால் இப்போது எல்லையற்ற சிம்மாசனத்தை பெறுவதற்கு உனக்கு ஒரு தங்க வாய்ப்பு கிடைத்துள்ளது. உன்னுடைய தங்க ஸ்திதியின் உள்ளுணர்வை, எதிர்கால தங்க யுகத்தின் மேன்மையான ஸ்திதியையும் நீ இப்போது சுலபமாக பெறமுடியும்.

**அகத்தூண்டுதல் பெறுவது :** ஓயாத என்னுடைய மனதை ஒரு நிமிடம், மௌன கடலான, பாபாவின் மீது, கவனம் செலுத்துகின்றேன். இந்த மௌனத்தில் பாபாவிடமிருந்து நான் தூய்மையான, சேவைக்கான எண்ணங்களை பெறுகின்றேன்.

**பாபாவிடமிருந்து ஆசீர்வாதத்தை பெறுவது :** என்னுடைய தேவதை ரூபத்தை சூட்சும உலகில் இனிமையான பாபாவின் முன் உண்டாக்குகின்றேன். மிகுந்த அன்புடனும் சக்தி வாய்ந்த திருஷ்டியின் மூலமும் தூய்மையான பார்வையின் மூலம், அவர் எனக்கு இந்த ஆசீர்வாதத்தை கொடுக்கின்றார்:

தந்தையுடைய இனிமையான சகவாசியாக நீ தொடர்ந்து வாழ்வதனால், நீ ஆதாரத்தின் கடல் உன்னை சூழ்ந்திருப்பதாக உணர்கின்றாய், பலமான இறக்கைகளை கொண்டு சவால்களை கடந்து உயரே பறக்கின்றாய், முன்பு முயற்சி தேவை பட்ட ஒன்று இப்போது இயல்பாக, சுலபமாக மற்றும் பொழுதுபோக்காக ஆகிவிட்டது.

**எல்லையற்ற சூட்சும சேவை (15 நிமிடங்கள்):** மேற் கூறப்பட்ட ஆசீர்வாதத்தை உலகின் மீது அருளுகின்றேன். இந்த ஆசீர்வாதத்தை பாபாவிடமிருந்து பெற்றுக்கொண்டு என்னுடைய தூய எண்ணங்கள் மூலமாக முழு உலகிற்கும் பரிசாக அளிக்கின்றேன். என்னுடைய தேவதை ஆடையில், உலகத்தை வளம் வந்து அனைத்து ஆத்மாக்களுக்கும் இந்த ஆசீர்வாதத்தை கொடுக்கின்றேன்.

**உறங்குவதற்கு முன்பு :** சப்தத்திற்கு அப்பாற்பட்ட ஸ்திதியில் என்னை நான் நிலை பெற செய்த பிறகு, மனதளவில் சோதிக்கின்றேன்: இன்றைய நாள் பொழுதில் நான் எவ்விதத்திலாவது கீழ்படியாமல் இருந்தேனா? அப்படி இருந்தால், நான் பாபாவிடம் அதை ஒப்புக்கொள்கின்றேன். நான் எதற்கு பலியானேன் – மனதளவில் அல்லது ஸ்தூலமாக – கவர்ச்சி, பற்று அல்லது சுயநலமாக நான் விரும்பி தேர்வு செய்தது. என்னுடைய செயல்களுக்கு நான் அட்டவணை வைக்கின்றேன். மேலும் 30 நிமிடங்கள் யோகத்தின் மூலமாக என்னுடைய தவறான செயலின் பாதிப்பை விலக்கின்றேன். சுத்தமான தெளிவான இதயத்தோடு நான் உறங்க செல்கின்றேன்.

*குறிப்பு: தினமும் கருப்பு வண்ணத்தில் இருக்கும் கருத்துக்கள் மட்டும் வேறுப்பட்டிருக்கும்.*